**சாவகச்சேரி பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 29 மார்ச் 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 11 செப்தெம்பர் 2018 இல் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சாவகச்சேரி பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரித்தான 15 வகையான 58 காணி கட்டடங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்காமையினால் ஆதனங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) வருமானத்திற்கு மாற்றப்படவேண்டிய பெறுமதிசேர்வரி ரூபா 726,061 நானாவித வைப்பு கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) முற்பணமாகப் பெறப்பட்டிருந்த கடை வாடகை ரூபா 7,750 கடை வாடகை நிலுவைகள் கூட்டுமொத்தம் ரூபா 152,000 இற்கு எதிரீடு செய்யப்பட்டமையால் வாடகை நிலுவை நிதிக்கூற்றுக்களில் ரூபா 144,250 ஆகக் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**பெறவேண்டிய கணக்குகள்**

(அ) சபை உறுப்பினர்கள் இருவருக்கு செலுத்தப்பட்ட உறுப்பினர் படி முற்பணம் கூட்டுமொத்தம் ரூபா 33,400 கடந்த 03 தொடக்கம் 16 ஆண்டுகளாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூன்று வீதி புனரமைப்பு வேலைகளுக்காக கிராம அபிவிருத்தி சங்கமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 145,210 வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருந்தும் கடந்த 06 ஆண்டுகளாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான ஆவணச்சான்றின்மை

**கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

ரூபா 71,845 கூட்டு மொத்தமான முற்பண நிலுவைகளினை தேவையான விபரப்பட்டியல்கள், உறுதிப்படுத்தல்கள் என்பன கிடைக்கப் பெறாமை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சரிபார்த்து சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | |
| (i) | பிரிவு 93 | | மலசலம் அகற்றலும், குப்பை அகற்றுதலும் எல்லா மலசலகூடங்களையும் தகுந்த காலங்களில் முறையாக சுத்திகரித்தலும் வெறுமையாக்குதலும் அத்துடன் தகுந்த முறையில் அழித்தொழித்து விடுதல் வேலைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (ii) | பிரிவு 126 (VII)(ஊ) | | தெருவின் மீது விளம்பரப்பலகைகளினதும் வேறு தற்காலிக கட்டமைப்புக்கள் தொடர்பிலும் எவையேனும் அனுமதிப்பத்திரங்களுக்கான கட்டணங்களை இறுத்தல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் நிதி ஒழுங்கு விதி 571 | 521,716 | இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட பாதுகாப்பு வைப்புக்கள், கேள்வி வைப்புக்கள், ஒப்பந்தகாரர் பிணை வைப்புக்கள் மீது ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்று நிருபம் 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம் | | சபையின் வாகனங்களிற்கு ஒரு வருட காலமாக எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னய ஆண்டின் ரூபா 44,710,142 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 55,767,504 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 106,000 | – | 86,145 | 611,440 | 106,000 | – | 119,728 | 611,440 |
| வாடகைகள் | 14,930 | – | 14,385,089 | 165,204 | 14,930,100 | – | 11,768,598 | 164,779 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,401,650 | – | 983,870 | 5,850 | 1,401,650 | – | 1,518,317 | 5,850 |
| ஏனைய வருமானம் | 19,102,820 | – | 38,266,309 | 6,445 | 19,102,820 | – | 37,669,943 | 16,478 |
| | 20,625,400 | – | 53,721,413 | 788,939 | 35,540,570 | – | 51,076,586 | 798,547 |

(ஆ) சபையினால் வீதவரிகள் சேகரிப்பின் போது பட்டியல்கள் விநியோகிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டதுடன் நிலுவைகளானவை மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் சேகரிக்கப்பட்ட வருமானத்திற்கும் இடையிலான வேறுபாட்டின் அடிப்படையில் திரண்டு வந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**2.2.2 வீதவரிகள்**

வீதவரி நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 554,354 அறவிடப்பட்டிருக்க கடந்த 01 தொடக்கம் 30 வருடங்களாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 வாடகைகள்**

கடை வாடகை நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 26,254 அறவிடப்பட்டிருக்க கடந்த 12 வருடங்களாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 அனுமதிப்பத்திர கட்டணம்**

மீளாய்வாண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் கூட்டுமொத்தம் ரூபா 5,850 அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 8,082,550 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 36,580,526 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள் மற்றும் பொதுவழிகள் மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரியின் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தலுடன் தொடர்புடையதாகவுள்ள அனைத்து விடையங்களினதும் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகத்தில் சபை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு உள்ளன.

(அ) **திண்மக் கழிவு முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற குப்பைகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்பட்டிருக்கவில்லை.

(ii) கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனைத் தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

உளூராட்சி ஆணையாளரால் சனசமூக நிலைய அபிவிருத்தி வேலைகளுக்காக வழங்கப்பட்ட நன்கொடை ரூபா 97,536 குறித்த நோக்கங்களில் ஈடுபடுத்தப்பட சபையினால் நாளதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 16 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சேவையிலிருந்து இளைப்பாறப்பட்ட இரு அலுவலர்களின் பதவியினர் கடன் நிலுவை ரூபா 8,319 அறவிடப்பட்டிருக்க கடந்த ஐந்து ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட்கணிப்பீட்டுச் சபை அறிக்கையில் திருத்தியமைக்கப்பட வேண்டியவைகள் என குறிப்பிடப்பட்டிருந்த 25 உருப்படிகள் தொடர்பாக நாளதுவரை சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.2 கையளிக்கப்படாத சொத்துக்கள்

சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் மூன்று வகையான வாகனங்கள் சபைக்கு உரித்தற்றனவாகக் காணப்பட்டன.

#### 3.4.3 விளைவற்ற சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) பயன்படுத்தப்பட்டிராத நிலையிலுள்ள சபைக்குரியதான உழவு இயந்திரமொன்றினைப் பயன்பாட்டுக்கேற்றதாக மாற்றியமைக்க கடந்த 05 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 4.4 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை மற்றும் ரூபா 1.2 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட நாவற்குழி பொதுச்சந்தை என்பன கடந்த 02 தொடக்கம் 04 ஆண்டுகளாக செயற்படுத்தப்பட முடியாத நிலையில் பயன்பாடற்றுள்ளன.

#### 3.4.4 பராமரிப்பு மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளத் தவறியமை

சபைக்குரிய உழவு இயந்திரமொன்று பழுதடைந்த நிலையில் விடப்பட்டிருந்தும் அதனை திருத்தியமைத்து பயன்பாட்டுக்கேற்றதாக்குவதற்கு சபையால் மீளாய்வாண்டில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 23 மயானங்களில் உடலைத் தகனம் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டு மயான வரியினை அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் நான்கு உப அலுவலக பிரிவுகளிலுள்ள ஆதனங்களுக்கு ஆதன மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வீதவரி அறவிடப்பட்டிருக்க கடந்த 10 ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 19,855 தொடக்கம் ரூபா 19,453,363 அல்லது 19 சதவீதம் தொடக்கம் 125 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 4,449 தொடக்கம் ரூபா 11,139,551 அல்லது 06 சதவீதம் தொடக்கம் 23 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| கணக்கீடு | இழப்பீட்டுப் பதிவேடு, காணி விற்பனை வரிப் பதிவேடு, வாகனப் பதிவேடு என்பன பராமரிக்கத் தவறியமை. |